# திருவாரூரில் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்.

## வார்தா திட்டமும் பார்ப்பனச் சூழ்ச்சியே

### ஹிந்தியை எதிர்க்க ஒன்றுபடுங்கள்.

### தோழர் லக்ஷ்மிரதன் பாரதியார் முழக்கம்

திருவாரூர், மே. 18,

நேற்றைய தினம் இந்நகர் ஓடம் போக்கி ஆற்றில் ஹிந்தி கட்டாய பாடமாகப் போகும் திட்டத்தை கண்டித்துப் பேச ஓர் பொதுக்கூட்டம் பிரபல வியாபாரியும் முனிசிபல் கௌன்சிலருமான தோழர் டி. கே. ஆர் எஸ். பி. தட்சணாமூர்த்தி அவர்கள் தலைமையில்நடைபெற்றது. முதலிலே கூத்தூர் முஸ்லிம் லீக் தலைவர் தோழர் குத்புதீன் அவர்கள் சென்னைப் பிரதம மந்திரியாரின் பிற்போக்குத் திட்டங்களையும், அவர் முஸ்லிம்களை ஏமாற்றுவதைப் பற்றியும் பேசினார். பிறகு தேவகோட்டை பிரபல வக்கீலும் காங்கரஸ் தலைவருமான தோழர் எஸ் லட்சுமிரதன் பாரதியார் எம். ஏ. பி. எல். பேசியதன் சுருக்கமாவது.

தோழர்களே!

சென்னை மாகாணத்தில் நமது பிரதம மந்திரியார் தோழர் ராஜகோபாலாசாரியர் அவர்கள் முதலிரண்டாவது மூன்றாவது வகுப்புகளில் வலுக் கட்டாயமாக ஹிந்தியைக்கொண்டு வந்து சூழ்ச்சியாக புகுத்தும் தன்மையைப்பற்றி அநேக தலைவர்கள் மி. விளக்கமாக எடுத்துச் சொல்லிவிட்டார்கள்.

வயது சென்ற தலைவர் ராமசாமிப் பெரியாரின் ஆணித்தரமான பேச்சுகளையோ, அல்லது அழகான சோமசுந்திர பாரதியாரின் பிரசங்கத்தையோ நாம் எதிர் பார்க்க முடியாது. ஹிந்தி பள்ளிக் கூடத்திற்கு வரப் போகும் காலமோ இன்னும் கொஞ்ச நாளில் இருக்கிறது. இந்தச் சமயத்தில் பிரதம மந்திரி யாரின் குயுக்தி வாதங்களையும், சாமர்த்திய தந்திரப் பேச்சுகளையும் நாம் கவனிக்கவும் முடியாது. இது சம்பந்தமாக செய்யவேண்டிய வேலையை செய்வதற்கு ஏற்ற சரியான காலம் இதுதான்.

**சட்டசபையில்நுழைந்ததெதற்கு?**

காங்கரஸ்காரர்களை சட்ட சபைக்கு அனுப்பியதானது சமஷ்டி, புதிய சீர்திருத்தம் முதலிய உருப்படாத காரியங்களை உடைத்து நொறுக்குவதற்காகவே தவிர நமது உயிர் போன்ற கலை, நாகரிகம் அல்ல மேற்கண்ட புதியசீர்திருத்தத்தை அழிப்பதற்குஇந்த பதவிகள்ஏதாவது உபயோகப் படாத வென்றெண்ணியேதான் நான்கூட காங்கரஸுக்காக பிரசாரம் செய்தேன். அந்தசமயத்தில் ஹிந்தி திட்டத்தைப் பற்றி ஓர் வார்த்தை கூட இல்லை. தோழர் ராஜகோபாலாச்சாரியார் தனது சகதோழர்களை ஹிந்திக்காக கூட்டம் போட்டு இதைப் பற்றி முடிவு கேட்டாரா? அல்லது சட்ட சபையில் இதற்கு அங்கீகாரம் வாங்கினாரா? அல்லது நமது சென்னை மாகாணத்தில் முக்கியமாகவுள்ள தமிழ் நாடு காங்கரஸ் கமிட்டி, ஆந்திர காங்கரஸ் கமிட்டி, மலையாள கமிட்டி, முதலிய கமிட்டிகளிடமிருந்து சம்மதி வாங்கினாரா? காங்கரஸ் பத்திரிகள் சொல்லும் வார்த்தைகளை எதிர்த்து ஒன்றுமே சொல்லக் கூடாதுஎன்றால் என்ன அர்த்தம்? இது அகில இந்திய காங்கரஸின் தீர்மானமாகவுமில்லை. அன்னிய நாட்டாருடைய அதிக்கத்தில் அவர்களுடைய பழக்க வழக்கம் நாகரிகம் தாண்டவமாடியும் நமது தமிழ் மக்களுள் 100-க்கு 98 பேர் தற்குறியாயிருக்கிற நிலைமையில், ஔவைப் பாட்டியாரின் புத்தகத்திற்கு அர்த்தம் கேட்கிற நிலைமையில், சர்க்காரின் தகவலுக்கு என போன்ற ஆங்கில நாகரின் உதவியை எதிர்பார்த்தாலொழிய நடக்காத நிலையில், நமக்குச் சொந்தமான காரியங்களை நம்முடைய தூயதமிழைக் கொண்டு காரியங்களை நடத்த பாஷாவாரியாக மாகாணங்களாகப் பிரிக்கும் முறையில் தமிழ் மாகாணம் தனியாக வேண்டும் என்கிற நிலைமையில், சுயராஜ்பத்திற்கு முதல்படியே "மாகாணங்களை பாஷாவரியாக பிரிக்கவேண்டும் என்று காங்கரஸ் திட்டமிருக்கிற நிலையில் ஹிந்தி வேண்டும் என்றால் நாமே தமிழை அலக்ஷியப்படுத்தி கொலை செய்கிறோம் என்பதைத்தவிர வேறுண்டா?

வங்காளத்தில் ஹிந்தியைப்புகுத்த முடியுமா? பம்பாயில் புகுத்த முடியுமா?

காங்கரஸ் பிரஜாவுரிமைத் திட்டத்தில் அவரவர்கள் மதம், கலை, பாஷை, முதலியவைகள் பாதுகாக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தமிழை அப்படியே தேவநாகரியில் எழுதச் சொல்லப்படுகிறது. பல இடங்களில் பல மாதிரியில்ஹிந்திபேசப்படுகிறது; எழுதப்படுகிறது. இதைப் பற்றி முஸ்லிம்கள் கேட்டால் "உங்களுக்கு இதைப்பற்றி ஏன் கவலை உங்களுக்குத்தான் இந்துஸ்தானி பாஷையாயிற்றே" என்று ராஜாஜி சொல்கிறார். இன்றைக்கு காந்தி-ஜின்னா பேச்சுகளில் முக்கிய பிரச்சனை கூட ஹிந்திப் பிரச்னை தான்.

தமிழ் நாட்டிலே இருந்து தூதவர் (Ambassador) அனுப்ப முடியுமா? தமிழ் நாட்டிலே இவ்வளவு உயர்வான தமிழுக்க காலேஜுகளில் பண்டிதர்களைத் தவிர வேறு பதவி உண்டா? 100 ரூபாய்க்கு மேல் சம்பளம் உண்டா? தலைசிறந்த தமிழ் பாஷைக்கு பண்டிதர் பதவியைத் தவிரவும், 100 ரூபாய்க்கு மேலுமில்லை யென்றால் இதைவிட கேவலமுண்டா?

ஆச்சாரியார் எவ்வளவுதான் பிடிவாதமாகவும், முரட்டுத்தனமாகவும் ஹிந்தியைக் கொண்டுவர முயன்றாலும் நாம் பிடித்த சண்டையின் பயனாக ஹிந்தி கட்டாய பாடமாக்கினாலும் மற்ற பாடங்கள் தமிழிலேயே சொல்லிக் கொடுக்கப்படும் என்றார். **ஆச்சாரியார்** ஒருபடி இறங்கி விட்டார்.

பிறகு 125 பள்ளிகூடத்தில் வைத்து பரீட்சை பார்க்கப் போகிறதாகச்சொல்லுகிறார். ராஜாஜி 2படி இறங்கி விட்டார்.

பார்ப்பனர் சூழ்ச்சி.

தமிழ் நாட்டார் ஹிந்தி படித்தால் வடநாட்டிற்குப் போய் சம்பாதிக்கலாம் என்று சொல்லி விட்டு தென்னாட்டிற்கு ஹிந்தி போதிக்க வடநாட்டிலிருந்து ஆட்கள் இறக்குமதியாக்கப்படுகிறது. பார்ப்பனப் பிள்ளைகளுக்கு சம்ஸ்கிருதம் நன்றாய் படித்து ஹிந்தியிலும் தேறிவிடுவார்கள். நமது பிள்ளைகள் ஹிந்தியில் சரியாக தேரமாட்டார்கள், இது பார்ப்பன சூழ்ச்சி என்கிறோம். நாம் இப்படி சப்தம் போட்ட பிறகு 'ஹிந்தி வகுப்பு இருக்கட்டும், பையன்கள் சரியாயாக ஹிந்தி வகுப்புக்கு வந்தால் போதும். பரீட்சையில் உட்கார்ந்துஎழுதட்டும். ஆனால் மார்க் வாங்கினாலும் சரிதான் பையனை தேறுமாறு செய்து விடுகிறோம், என்று இப்போது சொல்லுகிறார்கள். பரீட்சை தான் பையன் நிலையை தெரிந்து கொள்ள ஓர் அரிகுறி. ஜீரோ மார்க்கு வாங்கினாலும் பரவாயில்லை என்கின்ற பாடத்திற்கு அனாவசியமாய் பணம் செல வழிப்பானேன்? வார்தா திட்டத்திற்கு பணமில்லை என்கிறவர்கட்கு ஹிந்திக்கு செலவழிக்கலாமா?

வெற்றி நிச்சயம்.

இப்படி ஆச்சாரியார்மூன்றுபடி கீழேஇறங்கி வந்துவிட்டார். இதிலேயே நாம் பாதிக்குமேல் வெற்றியடைந்திருக்கிறோம். ஆகையால் தோழர்களே! இந்தியை பள்ளிக்கூடங்களில் வைக்கும் முறையை நாம் எதிர்க்க வேண்டும். வெற்றி கண்டிப்பாக நமக்குத்தான். ஹிந்தி படிக்கப்போகும் பிள்ளைகளின் பெற்றோர்களிடத்தில் கையெழுத்துவாங்கி அதைச்சர்க்காருக்கு அனுப்ப வேண்டும். பிள்ளைகள் ஹிந்தி வகுப்பு நடக்கும் நேரங்களில் வெளியே வந்து விடவேண்டும். அதற்குமேல் தண்டனை கொடுத்தால் சத்யாக்கிரகம் செய்வது நீங்கள்,எல்லோரும் ஒன்று சேர்ந்தால் இந்த ஹிந்தியைவிரட்டி விடலாம். நாளையிலிருந்தே ஆவன செய்வதற்கு புறப்படுங்கள்.

அடுத்தபடியாக வக்கீல் தோழர் சி. சிவசுப்ரமணிய முதலியார் பி. ஏ, பேசினபோது மாணவர்கள் தங்களுடன் ஒத்துழைப்பதில், தான் சந்தேகப்படவேயில்லையென்றும் இந்தப்பொறுப்பு இளைஞர்களாலே தான் நடக்க வேண்டும் என்றும் சொல்லி முடித்தார்.

பிறகு தோழர் டி என்.ராமன் அவர்கள் பேசும் போதசென்னையில் தோழர்ஸ்டாலின் ஜகதீசன் அவர்கள் உண்ணா விரதம் இருப்பதைக் குறித்துப்பாராட்டி, அந்த தோழர் சொந்தஊர் நமது திருவாரூர்தானென்றும், எல்லோரும் இந்த ஹிந்தி எதிர்ப்புக்கு தங்களது ஒத்துழைப்பையும், பொருளுதவியையும் செய்து வெற்றி பெறச் செய்யுமாறுகேட்டுக் கொண்டார்.

பிரபல ஜோதிஷரும், தமிழபிமானியுமான வைத்யநாதஸ்தபதியார் சிறிது பேசிய பின்னர் தலைவர் முடிவுரை கூறினார். வந்திருந்த தலைவர்கட்கு தோழர் வி. ஜி. ரெங்கராஜு மாலை போட்டு வந்தனோபசாரம் கூறியபின் கூட்டம் இனிது முடிவுற்றது.

---

## ராஜாரத்தினம் பிரிவு

(நமது நிருபர் தந்தி)

திருச்சி, மே, 21.

தோழர் கே. ஏ. பி. விஸ்வநாதம் அவர்கள் புத்திரன் ராஜாரத்தினம் நியூமோனியா ஜுரத்தினால் இன்று காலை மறைந்த செய்தியை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

## தோழர் ஈ. வெ. ரா.

(நமது நிருபர்)

ஈரோடு, மே. 21-

தோழர் ஈ வெ. ராமசாமி அவர்கள் 21—5—38ந் தேதி காலை ஈரோட்டை விட்டுக்காரில் திருச்சி மார்க்கமாக 22-5-38 ல் கூத்தநல்லூரில் நடைபெறும் நபிகள்நாயகம் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கும், அன்றுமாலை மன்னார்குடியில் நடை பெறும் பொதுக் கூட்டத்திற்கும், 23—5—38 திருப்புவனத்தில் நடை பெறும் முஸ்லிம் லீக் அரசியல் மகாநாட்டிற்கும் சென்றிருக்கிறார். பிறகு அநேகமாக 25ந் தேதி வாக்கில் ஈரோடு வருவார்.

28ந் தேதிக்கு இந்தி எதிர்ப்புக் கமிட்டி மீட்டிங்குக்கு சென்றுவிட்டு பிறகு சென்னை செல்வார்.

---

# தமிழர்களே!

**இந்திப் போர் மூண்டு விட்டது. தமிழ்நாட்டிலே இதுஒரு மாபெரும் போராய் நடக்கப்போகிறது. உங்கள் கடமையைச் செய்ய தமிழ்த்தாய் அழைக்கிறாள். கபடத்தனம் வேண்டாம். உண்மையுடன் வீரமுடன்வெளி வாருங்கள்.**

**ஆள் கொடுங்கள்—பணம் கொடுங்கள். வெற்றி நமதே.**

**ஸ்டாலின் ஜகதீசன் பட்டினி நோன்பு இன்றைக்கு 21-நாள்**

---

சென்று தான் என்ன செய்யப்போகிறேன்? கிராமத்திலிருப்போர் இறுதிச் சடங்குகளை நடத்தட்டும். என் கடனைச் செய்து முடிக்க நான் இங்கு இருக்க வேண்டியதுதான்" எனக்கூறிவிட்டு எதுவும் அறியாதவர் போல் சமாதானசித்தராய் கூட்டத்தைஇறுதிவரை வெற்றிகரமாக நடத்தி முடித்தாராம். இதுபோன்றே எத்தனையோ பொதுநல உழைப்பாளரும் நடந்திருக்கிறார்கள். ஆகவே பொதுஜன சேவையிலீடுபட்டோர்சுயதுக்கங்களைலக்ஷியார் என்ற உண்மையை உணர்ந்து அன்பர் விசுவநாதம் ஆறுதலுடைவாரென்று நம்புகிறோம்- அவருக்கு ஏற்பட்ட சோகம் [அரிதில் தணியக் கூடியதல்லவாயினும் அவர் ஈடுபட்டிருக்கும் பொதுத் தொண்டு அந்த சோகத்தைத் தாங்கும் சக்தியை அவருக்கு அளிக்குமென நம்புகிறோம். கண் மணி ராஜாரத்தினம் ஆத்மா சாந்தியடைவதாக!